951

உ

சிவமயம்

MADRAS.

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளார்

விருத்த குமார பாலரான

திருவிளையாடற்கும்மி.

திருநெல்வேலி தெற்குப்புதுத்தெரு

அழகியசொக்கநாதபிள்ளை

அவர்களால்

இயற்றப்பட்டதை

திருநெல்வேலி

சாலிவாடி அய்யரவர்களால்

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பி 500. முதற்பதிப்பு

1914

O26:417
N14
171445

உ

சிவமயம்

MADRAS

திருவிளையாடற் கும்மிப்பாடல்.

விநாயகர் வணக்கம்.

சீர்பூத்த வளமதுரைப் பதியிலுறைந்
சிந்தை மகிழ்ந்துறை சோமசுந்தரேசர்
கூர்பூத்தவேனெடுங்கட் கவுரிக்காகக்
கோலூன்றும் விருத்தராய்க் குமாரராகி
பேர்பூத்தபாலருமாம் விளையாட்டொன்றை
யினியதமிழ்க்கும்மியென விசைத்துப்பாடப்
பார்பூத்த வெங்கள் குலதெய்வமான
பதினொருநகைக் கணபதிபொற்பதங்காப்பாமே

கும்மிப்பாடல்.

ஸ்ரீமேவும் தென்மதுராபுரிச் சொக்கர்
புரிந்த திருவிளையாடல் ஒன்றைத்
தேமேவுப், செந்தமிழ்க்கும்மியில்ப் பாடிடச்
சித்திவிநாயகன் காப்பாமே 1

அங்கயல்க் கண்ணிபங்காளர் திருவிளை
யாடல் ஒன்றைக் கும்மியாயிசைக்கச்
செங்கையில் வேல்கொண்ட சண்முகநாதன்பொற்
சேவடியே துணைசெய்திடுமே 2

அப்புமுன் கூடலில்ச் செய்யும் ஒருவிளை
யாடல்க்கும்மித் தமிழ்ப்பாடல்சொல்லத்
துய்யவெண்டாமரைத்தையல் செந்தாமரைச்
சுந்தரப்பாதம் துணையாமே 3

விந்தைமிகுர், சோம, சுந்தரர் ஆடல்
விநோதம் ஒன்றைக்கும்மியாயுரைக்கத்
தந்தையுமாகிய சற்குருநாதன் பொற்
றாமரைத்தாள் அருள் தந்திடுமே 4

தங்கத்தில் வைத்த மணிகளிலே ஒன்றைத்
தாம்பிரம் தன்னில்ப் பதித்தது போல்
இங்கென் சொக்கேசர் திருவிளையாடலில்
யான் ஒன்றைக் கும்மியாய்ப்பாடலுற்றேன் 5

பாலுடன் சேர்ந்திட்ட நீரினையும் கூடப்
பாலெனக்கொள்ளும் பழமையைப்போல்
ஆலவாய்ச் சொக்கர் தம் லீலையைச்சொல் கும்மி
யும் இதைக்கொள்வர் அறிந்தோரே 6

சேற்றின் விரையல்க் கலக்கிய நீரும்
தெளிந்து நன்றாய்ச்சிறந்திடல்போல்
போற்றும் திருவிளையாடல் உரைக்கும் என்
புன்கவி இன்கவியாகிடுமே 7

சுந்தரவல்லி கனகாப்புஜவல்லி
சோபனவல்லி சுமுகவல்லி
மந்தரவல்லி மதனலீலாவல்லி
மாணிக்கவல்லி வசந்தவல்லி 8

சல்லாப மோகினி கல்யாண சுந்தரி
சந்த்ரவதனி விசாலாக்ஷி
உல்லாசநாயகியென்னும் நற்பேர்கொண்ட
ஒய்யார நன்னடைப் பெண்களெல்லாம் 9

பூமியிலுள்ள இருளையெல்லாம் பின்
புறத்தில் ஒதுக்கிப் புறப்படும் ஓர்
சோமனைப்போலும் வதனமும் பன்மலர்
சூட்டும் குழலும் துலங்கிடவே 10

தோற்றும் இளம்பிறை மத்தியிலே யிளஞ்
சூரியனொன்று துலங்குதல் போல்ச்
சேற்றடங்கண்ணியர் நெற்றியின் மத்தியில்ச்
சிந்தூரப்பொட்டும் சிறந்திடவே 11

வஞ்சகத்தோர் நடுநெஞ்சைப் பிளந்திட
வாள்களில் நஞ்சினை யூட்டுதல் போல்க்
கஞ்சமலர்ப்பதவஞ்சியர் செவ்வரிக்
கண்ணில் மையிட்ட கறுப்பிலங்க 12

அல்லிமலரினுள் மெல்லியமுல்லை
அரும்புகள் காணும் அதிசயம்போல்
வல்லியைநேர் இடைமாதர் செவ்வாய் தோறும்
மந்தஹாசப் பல்வரிசை மின்ன 13

ஆலாலுடன் அந்த வெண்ணகை யோடுற
வாடப்பணிந்தங்கடுத்தது போல்ப்
பூவையர் செண்பகமென் மலர் மூக்கினில்ப்
பூட்டிய முத்துப் புலாக்கிலங்க 14

தாமரைமீதன்பு காட்டிடச்சூரியர்
தாம் வந்தடுத்துற்ற தன்மையைப்போல்
மாமுகத்துக் கிருபாலுள்ள காதினில்
மாணிக்கக்கம்மல் வனப்பிலங்க 15

கண்டிகையும் கொத்து முத்துச்சரமும் பொற்
காறையும் சங்கக்கழுத்தில் இட்டு
வண்டிசை கூந்தல்ப்பணிகளும் தோள்களில்
வங்கியும் கையில்வளையும் இட்டு 16

சந்தனம் குங்குமம் அத்தர் பன்னீர் முதல்ச்
சவ்வாது சாதிப்புனுகுடனே
கந்தமலர்கள் அணிந்திட்டவாசனை
காதவழிக்கும் கமழ்ந்திடவே 17

கூடி விளையாடும் வேளையிலே அந்தக்
கொம்பனையார் தமக்குள் மிகவும்
பாடிப்படித்திட வல்லவியாகும் ஓர்
பைந்தொடியாள் முகம்பார்த்துரைப்பார் 18

சுந்தரிகையாக இருப்பதனால் மனம்
தன்னில் ஆனந்தம் தழைத்திடலால்
இந்த நல்வேளையில் கும்மியடிப்பதற்
சேற்ற கதையொன்றிசைத்திடென்றார் 19

போதஞானத்திலும் பொற்பிலும் கற்பிலும்
புத்தியிலும் தெய்வ பத்தியிலும்
மாதர் கூட்டத்திலுள் மேலாயிருக்கின்ற
மங்கை நல்லாளும் மனமகிழ்ந்தே 20

வாசக்கடம்ப வனத்தினில் யாவரும்
வந்து தொழும் சோமசுந்தரனார்
செய்த திருவிளையாடலைப்பாடி நாம்
நேத்தியாய்க்கும்மியடிப்பம் என்றாள் 21

அந்தமொழியினைக் கேட்டவுடன் பெண்கள்
ஆனந்தமாகி அகம் குழைந்து
தந்தலைவிக்குபசாரஞ்செய்தே அவள்
தன்முகம் பார்த்திது சாற்றுகின்றார் 22

அண்ணல் அறுபத்துநாலு திருவிளை
யாடல் செய்தார் மதுராபுரியில்
எண்ணெண் கதையுள்ளும் நன்றாயிருப்பதொன்
றெடுத்துச்சொல்லு நீயென்றுரைத்தார் 23

நன்றாக ஒன்று சொல் என்றீரே அது
ஞாயமோ சொல்லுங்கள் தோழியரே
என்றே அவர்க்கெல்லாந் தோன்றும்படிக்கந்த
வந்திழையாளும் எடுத்துரைப்பாள் 24

சர்க்கரை வட்டினில் எந்த இடத்தும்
சமரசமாகவே தான் இனிக்கும்
சாக்கர் திருவிளையாடலிலே யெதைச்
சொன்னாலும் இன்பப் சுரக்கும் என்றாள் 25

ஆனாலும் அந்த படந்தையர் எங்களுக்
கானந்தம் நல்கிடத்தக்கதுவாய்
மேனாளில்ச்செய்த விளையாடல் ஒன்றை
விடிந்திடு முன்னம் மொழிந்திடென்றார் 26

என்றசொல்கேட்டவள் வந்திழையீர் சுந்த
ரேசர் கவுரியெனுங் கொடிபால்ச்
சென்றுமுன் செய்த திருவிளையாடலைச்
செப்புகின்றேன் கும்மிச் செந்தமிழால் 27

தன் மதுரைத்தனம் செய்து செங்கோல்கொண்டு
தாரணியோர்களைத் தாப்புரக்கும்
தென் மதுரைச் சொக்கர் ஆடலிலே மனம்
செலுத்திக் கும்மியடித்திடுவோம் 28

கோல் வளையல் கிலுங்கிடவே யிரு
கொங்கையிளநீர் குலுங்கிடவே
சீலமுடன் சொக்கநாயகர் ஆடலைச்
சிந்தித்துக் கும்மியடித்திடுவோம் 29

சிந்திக்கச் சிந்திக்க உள்ளம் உருகிபே
தேகம் புளகிதம் ஆகிவிடும்
அந்தக்கதையினால் ஜென்ம சாபல்யம் உண்
டாகும் நித்யானந்தம் ஆகுமென்றே 30

செல்வர் சொக்கேசர் கவுரிக்கச்செய்த
திருவிளையாடல்ச் சிறப்பினை நான்
சொல்வதுபோல்ச்சேர்ந்தசொல்லுக்களொன்றுமுன்
சொல்லிக்கதையைத் தொடங்கலுற்றாள். 31

கதை.

மின்பொதிசீர் இமயாசலத்தே நின்று
மேதினியைச் சமமாக்கவந்த
தென்பொதியாசலமாமுனி தங்கிய
செந்தமிழ்ப் பாண்டித் திருநாட்டில் 32

நமது குலதெய்வம் ஆன சொக்கேசருக்கு
நஞ்சு கொடுத்ததென்னும் பகையால்த்
தமரொடும் கூடிக்கடல்முகம் பாராத
தண்புனலவையை வளநாட்டில் 33

ஏழைகளுக்கீவதே பிச்சை மற்றோர்க்கீவ
தென்னென்றிருங் கடல்க்கீயாமல்
வாழைகமுகுக்குப் பாய்குளங்கட்கு
வழங்கு நீர்வையை வளநாட்டில் 34

எத்தும் உலுத்தரிடஞ் சேர்ந்தால் அவர்
புத்திபிடிபடும் என்றாள் எண்ணிக்
கைத்தகடல் முகம்பாராமல்த்தரும்
சுத்தநீர் வையை வளநாட்டில் 35

வேதநல்வேள்வி விளங்கிடவே என்றும்
மாதமும்மாரி வழங்கிடவே
சீதவளங்கள் சிறந்திடவே இன்ப
மாதருமங்கள் வளர்ந்திடவே 36

சிங்கமொடானை புறவாடக்கிள்ளை
தீபருந்தொடும் சேர்ந்துலவ
தங்கவரிப்புலியும் பசுவும் ஒரு
துறையில்த்தண்ணீர் குடித்துலவ 37

மீனக்கொடிநல மேலாகக்கமழ்
வேப்பம்பூமாலை வியனோங்கச்
சேனைக்கடல்கள் முழங்க ஐம்பத்தாறு
தேசத்தரசர் திறைசெலுத்த 38

சந்த்ர குலத்தின் தவமாகித் தமிழ்ச்
சங்கந்திகழ் மதுராபுரியில்
மந்த்ர சிம்மாசனம் ஏறி அனுதினம்
மாமநு நீதிவழுவாமல் 39

விக்ரம பாண்டியன் ஆண்டிடும் நாள் ஒரு
வேதியன் தன் பேர் விரூபாக்கன்
தக்கமதுரைத்தலத்தில் உள்ளான் அவன்
தன் மனையாள் பேர் சுபவிரதை 40

பாரில் இவர்கள் குபேர சம்பத்தெனும்
பாக்ய. நல்யோக்ய சிலாக்ய முள்ளார்
ஈரிருவேதநெறிப்படி தப்பாமல்
என்றும் நடக்கும் இருதயத்தார் 41

வானவர்க்கும் பிதிர் தேவருக்கும் மறை
வகுக்கும் நால்வகை ஆச்சிரமர்க்கும்
ஆன உபசாரம் செய்து முப்பத்திரண்
டறம் வளர்த்திடும் அன்புடையார் 42

சகல பாக்யமும் பெற்றிருந்தும் பிள்ளை
தான் ஒன்றில்லாத தவக்குறையால்
மிகவும் சிந்தை கருகிநைந்தே அனல்
மேல்மெழுகென்ன உருகிநொந்தார் 43

குலத்தில் முன்னவர் செய்பிழையோ தவக்
குறையோ நாம் செய்த குற்றங்களோ
நிலத்தில் நம்மை மலடர் என்றே சொல்லும்
நிந்தைக்கிடம் ஆனோம் என்றயர்ந்தார் 44

புத்திரர் கையிட்டளையாத சோறு
புழுவென்று மேலோர் புகல்வாரே
இத்தனை துன்பத்திற் கேதுவாய் நாம் இங்
கிருந்தென்ன போயென்ன என்றிடைந்தார் 45

தண்ணீர் மிகமழை பெய்தமுற்றத்தில்த்
தவழ்ந்தளையப் பிள்ளையில்லையென்றார்
மண்ணீர் அளைந்திட்ட கைகளினாலே
மடிபிடிக்கப் பிள்ளையில்லையென்றார் 46

மக்கள் மெய்தீண்டில் உடல்க்கின்பமென்றும்
மழலைச் சொல்காதுக் கினிமை யென்றும்
தக்கவர் சொல்வர் அதைப்பெற்றிடாத
ஜனனம் படைத்தோம் எனத்தளர்ந்தார் 47

வண்ணப்பொன்மார்பில் விளையாடிக்கனி
வாய்திறந்தின்பமயமாம் சொல்
பன்னிடத்தக்க மதலையில்லா வெறும்
பாக்யம் பெற்றென்ன சிலாக்யமென்றார் 48

இந்தவிதமாய் வருந்தியும் பிள்ளை
யிலாதிருந்தார் எவர் சொற்படிக்கோ
சுந்தமலர்க்குழல்த் தெய்வங்களாம் சத்த
கன்னியர் தம்மைக் கருதலுற்றார் 49

அன்னவர் சிந்தையிரண்டும் ஒன்றாகும்
அருமைத் தவஞ்செய் பெருமையினால்
பன்னருங்கற்பின் அருந்ததிநேர் அந்தப்
பைந்தொடி கெர்ப்பவதியானாள் 50

இறுதி வரையிலும் பிள்ளையில்லாமல
டென்னும் பழிச்சொல் வந்தேறாமல்
உறுதியதாய் ஒரு பிள்ளைக்கினியிடை
உண்டெனல் போல் இடைகண்டதுவே 51

மின்னிஉடப்பு தளதளென்ன இதழ்
வெழுப்பக்கெண்டை விழிபசப்ப
அன்னத்தில்மிஞ்சும் விருப்பம் விட்டாள்புளிப்
பானபதார்த்தத்தில் ஆவலுற்றாள் 52

ஆலிலைபோன்ற வயிறதுசூலால்
அநுதினமும் தன் அகத்தில் வந்து
பாலுடன் அன்னம் புசித்துச்செல்கின்றவர்
பற்பலர் தம் வயிறொப்பாக 53

தன்னிகர் சீர்திகழ் நன்மையதாம் தினம்
தான் வந்துதித்த கருணாத்திலே
பின்னம் இல்லாத தவப்பயனாகிய
பெண்மகவொன்றினைப் பெற்றெடுத்தாள் 54

சந்த்ரன் உதிக்கமலர்ந்த செவ்வாம்பலில்த்
தங்கியவண்டினம் ஒலிடல்போல்
வந்த மதலையைக்கண்டு மகிழ்ந்திட்ட
மாதர் எல்லோரும் குரவையிட்டார் 55

பிள்ளைக்கலந்தவர் ஆகையினால் இதைப்
பெண்மகவென்று சலியாமல்
உள்ள மகிழ்ந்து நன்னீராட்டி முகந்
து சிதமாம் திலக்காப்பும் இட்டு 56

தேடுஞ் சுவையுறுதேனொடு நெய்யைத்
தெளித்ததில்ப் பொன்னைத்தெரிந்துரைத்துக்
கூடுமெய்ப்பத்தியும் ஞானமும் சல்வியும்
குழைத்துச்சேனை கொடுக்கலுற்றார் 57

சாதி ஆசாரப்படி குழந்தைக்கு முன்
சாதகக்கர்மம் தனைமுடித்துக்
கோதில் மெய்ப்பாசந் தழைத்ததினால் முன்பு
கொண்டுள்ளவெப்பம் குளிர்ந்தாரே 58

ஆண்பிள்ளைப் பேற்றினுக்கொப்பாக விதை
யாதியதானம் எல்லாம் நடத்தி
மாண்புள்ள மேலவர் எல்லோர்க்கும் நல்ல
மங்களதாம்பூலமுங் கொடுத்தார் 59

பெற்றமதலைக்குச் சுத்திசெய் நாளினில்ப்
பேரும் கவுரி யெனச்சூட்டிச்
சுற்றமகிழ் அங் நற்றவச்செல்வியைச்
சோதிமணித் தொட்டில் மீதமைத்தார் 60

சித்திரமே அருள்முத்திரையே பசுந்
தேனே தெவிட்டாத தெள்ளமுதே
நித்திரைபோ சற்று நித்திரைபோ துயர்
நீக்கியசெல்வமே நித்திரைபோ 61

ஆரார்சடையினார் ஆராதிபார் ஆரோ
அவரை ஆதரியார் எனவே
ஆராய்தலால் எய்தும் ஆராமையோடுய்வார்
ஆராரோ என்று தொட்டாட்ட னுற்றாள் 62

தந்தையும் தாயும் தம் செல்விக்குச்சூரியன்
தன் வெயில்க்காட்டிப் பசுக்காட்டிச்
சிந்தைமகிழ்வுடன் ஒக்கலைமேல்வைத்துத்
திருந்தும் அம்புலிகாட்டினரே 63

ஆறுகும் தொழிலாளருக்காம் முறை
அத்தனையுஞ்செய்து காதுகுத்தி
மாறாமல் நாள்ஒருமேனியும் வேளைக்கோர்
வண்ணமுமாக வளர்க்கனுற்றார் 64

பிள்ளைதவழ்ந்து பின்உட்கார்ந்தெழுந்த தன்
பின்பு நடக்கக்கண்டின்பமுற்றார்
அள்ளிப்பணிகள் இட்டார் கலியாணம்போல்
ஆண்டுநிறைவுங் கொண்டாடினரே 65

வாசல்மட்டோடி விளையாடிப்பின்பு
வன்னச்சிற்றாடை அரைக்குடுத்துப்
பாசம்வைத்தேந்திய பாவைக்குழந்தைக்குப்
பாவனையால் முலைப்பால்கொடுத்து 66

தித்தி குதலைமொழி பேசி ஒத்த
சிறுபெண்கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு
வீதிதனில்ச் சிறுவீடுகட்டி அதில்
வேறுவேறாய் மணல்ச்சோறமைத்து 67

பின்னனுபோகர் முன் தோன்றுதல்போலவே
பிச்சை யிட்டுண்டும் விளையாடி
நன்னயமாய் வளர் கன்னிகவுரிக்கு
நாலு வயது நிரம்பிடவே 68

எண்ணிடும் ஐந்து வயதாகத்தன்னை
யீன்றபிதா இடத்தேகிநின்று
மண்ணில் எடுத்த ஜனனத்தை மாற்றிடும
மார்க்கம் என்னென்று மகள் வினவ 69

மறையவன் கேட்டுள் அதிசயித்தே உமை
மந்திரம் தன்னைவகுத்துரைத்தான்
முறையுடன் நாடித்தெளிந்துகொண்டாள் அவள்
முன்னைத்தவக்குறை முற்றிடலால் 70

இந்தமகள் உண்மைப்பத்தியும் புத்தியும்
ஏற்றகுணமும் இலக்கணமும்
தந்தை அறிந்திவள்க் கெய்தும் கணவன் எத்
தன்மையனோ என எண்ணமிட்டான் 71

மாதவச்சைவமும் முந்திய ஆச்சிர
மத்தொழில் விதககவல்லவமும்
ஏதமில்சீரும் உள்ளான் ஒருவேதியன்
எய்திடில் நன்றென் றிடைந்தானே 72

செல்லமகள் வயதெட்டாக மணம்
செய்திடுங்காலம் வந்தெய்தியதால்
ஒல்லை வயிணவப் பிரமசாரியாம்
ஒருத்தன் அம்மனையுள்ப் புகுந்தான் 73

துளசிமணிகள் இலங்கிடவே மெய்யில்த்
துவாதசநாமம் துலங்கிடவே
அளவுபடாத வறுமையுடன் கையில்
அக்ஷயபாத்திரம் ஒன்றேந்தி 74

தச்சன் அடித்த தலைவாசல் தோறும்போய்த்
தான் பிச்சையேற்றுத் தரங்குலைந்தே
உச்சியிடிக்கத் திரிந்தவனுக்கு நல்
ஊழ்விதி ஓடிவந்துற்றதனால் 75

தெய்வச்செயலோ மகள்க்குவயதெட்டுச்
சென்றதனால் மிகச்சிந்தை செய்தோ
சைவம் இகழ்ந்திடும் ஏழைவயிணவன்
தான் செய்த பூர்வதவப்பயனோ 76

காதல்கொண்டெண்ணற்ற மாதவத்தால்பெற்ற
கண்மணியென்றும் கருதாமல்ப்
பாதகர் என்றெண்ணிப் பாராமல்ச் செகம்
பழிக்கும் என்றும் பதறாமல் 77

பிச்சைக்குழைந்த எளியவனுக்குத் தன்
பெண்ணைக்கொடுக்கப் பிரியமுற்றே
இச்சையுடன் கையில்த்தத்தம் செய்தான் தன
தில்லாளிடத்திலும் சொல்லாமல் 78

பொன்னறியாதவர் தம்மிடத்தே பெரும்
புதையல்எய்தும் புதுமையைப்போல்க்
கன்னிகிடைத்ததை யெண்ணிவயிணவக்
காளைமனது களித்துநின்றான் 79

ஆங்காலத்தேகம் வருந்திடவேண்டாம்
அதிசயமாக அருங்கொப்பினில்த்
தேங்காய்க்கிளநீர்போல்ச்சேருமென்றௌவையுமுன்
செப்பியமுதுரை தப்பிடுமோ 80

வாசலில்ப்பிச்சைக்கு வந்தவன்பெண்ணுக்கு
மாப்பிள்ளையாய் விட்டவாறதனைத்
தாய்செவிதன்னில் உருக்கியசெம்பினைச்
சாய்த்ததுபோல்க் கேட்டுர்தந்தளிந்தாள் 81

தங்குலம்வாழப்பிறந்த மகள்க்குற்ற
தாழ்வினைக்கண்டு சகிக்காமல்ப்
பொங்கியகானல்ப்பறக்கின்ற பொட்டலில்ப்
போட்டஒருபுழுப்போல்த் துடித்தாள் 82

தந்தைமனதினில் நிந்தையென்றெண்ணாமல்த்
தான் செய்தமோசம் தனையறிந்து
பந்துஜனமுதல் யாவரும் ஈதென்ன
பாவம் என்றெண்ணிப் பலவுரைப்பார் 83

முப்படியோரும் இரதியும் வாழ்த்த
முதிர்ந்த அழகு முதல்ப்படைத்தே
யிப்படித்தாழ்வும் விதித்தபிரமனுக்
கென்னபயன் தான் இனிக்கிடைக்கும் 84

பாத்திரம் அறிந்து பிச்சையிடுகல்ல
கோத்திரம் அறிந்து பெண்கொடென்றே
சாத்திரம் ஓதியறிந்த பிராமணர்
ஆத்திரப்பட்ட தநியாயம் 85

குலமும் பார்த்திலன் நலமும் பார்த்திலன்
கோத்திரம் பார்த்திலன் சாத்திரத்தின்
பலமும் பார்த்திலன் பெண்ணைவளர்த்ததையோ
பாழ்க்கிணற்றினில்த் தள்ளினனே 86

சத்துருவாகிய வைணவர்க்கும் நல்ல
சைவர்க்கும் உண்டோமா சம்பந்தம்
மெத்தப்படித்த இச்சைவப்பிராமணர்
புத்தியும் இப்படிப்போய்விடுமோ 87

யாதிவனைப்பெற ஆதியில்மெத்த
வருந்தி அருந்தவம்செய்ததெல்லாம்
ஏதும் கருத்தினுள் எண்ணிப்பாராமலே
இப்படிச் செய்திட யார் துணிவார் 88

எண்ணித்துணிவதே கர்மம் துணிந்தபின்
எண்ணுவதெல்லாம் இழுக்கேயாம்
பெண்ணின் தலையின் விதிவழியிந்தப்
பிராமணர் தன்மதிபோனதென்பார் 89

வெள்ளம் சிரசுக்குமேலானால் அதன்
மேல் என்னபேச்சு நம்மால் இவனைத்
தள்ளவொண்ணாதென்றவன் குலம் கோத்திரம்
தன்னைவிசாரிக்கத்தான் துணிந்தார் 90

உற்றவயிணவப் பிரமசாரியை
ஊர்என்ன பேர்என்ன உள்ளபடி
சற்றெங்களுக்குச் சொல்லென்றார் அவன் தன்
சரித்திரம் யாவும் விரித்துரைத்தான் 91

ஏதும்வயிணவக்குற்றம் அல்லாமல் மற்
றேதும் குறைவில்லை யென்றறிந்து
தாயும்தமர்களும் ஒத்தபின் மற்றும்
சடங்கின் விதியைத் தொடங்கலுற்றார் 92

மண்ணிய பந்தலில் மேல்க்கட்டி தோரணம்
வாழை முதலாம் வகை நிரைத்துப்
பொன்னெனும் கௌரிக்குப் பொற்பணிகற்பணி
பூட்டி அழகுக்கழகு செய்தார் 93

வாத்தியத்தோடு மறை முழங்கப்பெண்ணை
மாப்பிள்ளை கையில் மணவரை மேல்ச்
சாத்திர ஓமம் தனைவளர்த்தக்கினி
சாட்சியதாகவே தான்கொடுத்தான் 94

நங்கையர் பாடி நலுங்கும் இட்டே ஐந்து
நாளைச்சடங்கும் நழுவாமல்
மங்களமாக முடித்துச் சிலநாள்
வரையிருவோரையும் வைத்திருந்து 95

சீதன மெத்தக்கொடுத்துத் தன் செல்வியைத்
தேடாமல்வந்த மருகனுடன்
ஆதரவாகவே மாதவவேதியன்
அன்னவன் ஊருக்கனுப்பிவிட்டான் 96

நல்வளங்கொண்ட மதுரையைவிட்டந்த
நங்கையோடும் தன் நகர்க்கேகிச்
செல்வம் தரவல்லசீதேவி தன்னைத்
திருமணம்செய்து வருவான்போல் 97

வறிஞனாகித்திரிந்தவன் தானே
மணமகனாகிமனையில்வரச்
சிறிதும் கண்டு மகிழாமல்பெற்ற
தீயவர்சிந்தைத்திடுக்கமுற்றார் 98

குரங்கின் கையினில் பூமாலைதன்னைக்
கொடுத்தால் அதன்மணம் கொண்டிடுமோ
அரங்கொள்கண்ணியர் ஆசைக்கிளியின்
அருமையைப்பூனை அறிந்திடுமோ 99

சைவதவப்பெண் அருமைஅறியாத
தாயும் தகப்பனும் தம் மகனை
வைவதும் வாதனைசெய்வதும் ஆகி அம்
மாதைவிலக்கும் வகையுரைப்பார் 100

பிச்சைக்குப்போன நீ லச்சைக்கஞ்சாமல்ப்
பிடாரியைப்பெண்டு பிடித்தால்ப்போல்
இச்சைவகன்னியைக் கொண்டுவந்தாயேஉன்
இஷ்டப்படிசெய்தால் ஏற்போமோ 101

சற்றும்நெஞ்சஞ்சாமல்ப் பெற்றதாய்தந்தையைத்
தள்ளிஉன்மூர்க்கம் செய்தாயல்லவோ
உற்றெங்களுக்கு நீ பிள்ளையும்இல்லை
உனக்கினிநாங்கள் பெற்றோருப் இல்லை 102

சைவமதத்திலே சேர்ந்தாயே இனிச்
சாம்பலைப்பூசவும் சோம்பாயே
எவ்வகையாகிலும் பெண்கிடைத்தால்உனக்
கெம்மதம் ஆனாலும் சம்மதமே 103

குலத்திற்கிழுக்கான கோடாலிக்காம்புபோல்க்
குடிகெடுக்க அடியெடுத்தாய்
தலத்தில் இதையறிந்தால் நம்மைப்பந்து
ஜனங்கள்கட்டுச்செய்து தள்ளாரோ 104

இந்தவிதம் செய்யலாமோ திருமண்
இடுவார்க்கும் சாம்பல் இடுவார்க்கும்
தொந்தம் ஏதேனும் உண்டோ பச்சை மண்ணுக்கும்
சுட்டமண்ணுக்கும் ஓர் ஒட்டும் உண்டோ 105

மாமி மகளென்று கொண்டாயோ அடா
மடையா பெண்கள் கிடையாதோ
பூமியில் இல்லாத காமம் படைத்தாயோ
புலியும் புல்லைப் புசித்திடுமோ 106

மானங்கெடப்பிறர் வசைகள் பேசிட
வாளால் வைத்துயிர் வாழ்வதிலும்
ஊனங்கெடச் செத்தாய் ஆனாலும் இப்பூமிக்
கோர் பெரும்பாரம் குறைந்திடுமே 107

ஊட்டி வளர்த்தாரைக் கேட்டுச்செய்யாமல்ப் பெண்
டாட்டி கிடைத்ததே போதுமென்று
வேட்டிமையாய்க் கட்டிக்கூட்டி வந்தாய் இனி
மேலும் உன் கண்ணில் விழிபபோமோ 108

கன்னிமேல் ஆசையுண்டாமானால் உன் தன்
கடையை அப்புறம் கட்டிடடா
இன்னமும்கேள் எங்கள் உறவை வேண்டியல்
இவளைத் தள்ளிவை இப்பொழுதே 109

என்றிருபேர்களும் வாயினில் வந்தவா
றேசி அவதூறு பேசிடுங்கால்
ஒன்றும் தடுத்தக் குரையாதே மகன்
ஒடுங்கிநின்றான் உடன் அவர்கள் 110

பையல்நமக்குள் படிந்துவிட்டான் இனிப்
பார்த்தெவர் கேட்கப்படுமெனவே
தையல்நல்லாள் சிவசிந்தனையும்சைவத்
தவவடிவையும் தான்பார்த்து 111

கணமென்று முத்திரைத்தீக்ஷைசெய்காலத்தில்க்
காந்திவெதுப்பும் உடம்பினைப்போல்
மனம்வெந்த வைணவர் சைவக்கொழுந்தான
மங்கையை வேறாக்கி வைத்துவிட்டார் 112

ஓதும்இரக்கம் உள்ளதும் இல்லாமல்வே
றொதுக்கி வைத்ததும் அல்லாமல்
மாதினைகாணுந்தோறும் தினம் தூஷிப்பர்
மனதில் அடம்மிகக் கொண்டதனால் 113

அன்னவர் ஓர்தினம் கன்னிகையைத்தனி
யாய்வைத்துத்தங்கள் அகம்பூட்டித்
தன்னமையாம் இனத்தோர் கலியாணம்
தனைக்குறித்தூர் வழிதாப்போனார் 114

கைவல்யபாதகலை, யார்க்கும் உள்ளபாச
கழுவிப்பரிசுத்தம் ஆக்குவது
தெய்வவெண்ணீறும் அஞ்செழுத்துமென
தெளிந்துமங்கை வழுத்தலுற்றாள் 115

மெய்யடியார்க்கன்பு செய்யச்சிறிதும்
விரும்பாதசிந்தை இரும்பதென்பாள்
மையணிகண்டன் அடியாரைப்பாடாத
வாயிருந்தென்ன மகிமையென்பாள் 116

அத்தன் அடியார் பணிவிடைசெய்யாத
ஆக்கைமரத்தை ஒப்பாகும் என்பாள்
கர்த்தன் அடியார் தரிசனம் இல்லாத
கண்கள்முகத்திரு புண்கள்என்பாள் 117

காதல்அரன் அடியார் புகழ்கேளாத
காதிருந்தேதுபகாரம்என்பாள்
நாதன அடியவர் பாதமணங்கொள்ளா
நாசிபடைத்தென்ன சீசீயென்பாள் 118

அரன் அடியாரிடத்தைப்புலனும், செலுத்
தாதவடிவங்கள் பாவையென்பாள்
பரன் அடியார் சிவநெறியல்லாநெறி
பாவநெறியேயென்பாள் பதைப்பாள் 119

எல்லாஉயிர்க்கும் உறுதிஇசபரம்
என்றுசொல்வார் அவையிந்திடுவோன்
எல்லாமும்காணும் உயிர்க்குயிராகி
இருக்குப்பரசிவம் என்பார்கள் 120

வினைத்துன்பங்களைத் தீர்க்குமருந்தருள்
மெய்யடியார் சிவவேடம்என்பார்
எனத்தளர்க்கொரு தொண்டரைக்காணமல்
என்றும்மாசடைந்திட்டதென்பாள் 121

இந்தவிதம்சொல்லி நொந்தவளாத்தனித்
திருந்துவருந்தும் ஏந்திழைக்காய்ப்
பந்தம்அறுத்தருளும் சோமசுந்தர
பாண்டியனென்றரசாண்டபிரான் 122

ஓதுங்,கழுத்திலும், காதிலும்,கையிலும்
உருத்திராக்கமணிவடங்கள்
போதஅணிந்துகொண்டே தம்மைப்போல்ப்பழம்
புத்தகப் ஒன்றும் கட்கத்தணைத்து 123

தும்பைப்பூப்போலவே நரைத்தரோமமும்
சுரிந்தகன்னமும் இருமலும்
தம்பொற்புமார்பினில் அணிமுந்நூலொடு
தலைநடுக்கமும் தாழ்வடமும் 124

சரிந்தகோவண உடையும்பூசிய
தவளநீற்றின் உத்தூளிதமும்
விரிந்தபீற்றல்க்குடையும் கோலுமாய்
மேனிதள்ளாடி வெயர்த்திடவே 125

பல்பகலாய்ப் புசிப்பில்லாமல்வாடிப்
பசித்தவர்போலப் பரதவித்து
வல்வினைநீக்கிடும் சைவக்கவுரி
மனங்களிகூர மனைபுகுந்தார் 126

கார்த்திகைப்பிறை கண்டால்ப்போல்நடுக்
காட்டில்ச்செந்தாமரை பூத்தால்ப்போல்
வார்த்திகப்பிணியாளிக்குச் சஞ்சீவி
மருந்துதான் எதிர்வந்தால்ப்போல் 127

பிள்ளை அழுங்குரல் கேட்டுச்சகியாமல்ப்
பெற்றதாய் ஓடிவந்துற்றால்ப்போல்
எள்ளளவும்பொருள் இல்லாதஏழைக்
கிருநிதிவந்தெதிரிட்டால்ப்போல் 128

வந்தவளைக் கண்டெழுந்தோடி அந்த
மாதவர்பாதம் வணங்கிநின்று
சிந்தைமகிழ்ந்திங்குநீர் வரநான்முன்பு
செய்ததவம் என்னசெப்பும் என்றாள் 129

கொதித்திட ஞாயப்பழுது செய்வார்குடி
கொள்ளுமனையென்று தள்ளாமல்
மதித்தய்யர்பாதம் மிதித்திடவேயிந்த
மனைமுன்செய்ததெம் மாதவமோ 130

துஷ்டர்களால்ப்படும் துன்பஇருளைத்
துரத்தஎழுப் ஞான சூரியனோ
கஷ்டப்படாதிந்த ஜெனனக்கடலைக்
கடத்திவிடவந்தகப்பலதோ 131

விதிவழியே நம்மை நம்பினள் மெத்தவும்
வெம்பினள் எதினிமேல்ப் பிழைபாள்
ததியிது காத்திடவேண்டுமென்றெண்ணிச்
சதாசிவமே, யிங்குதான்வந்ததோ 132

என்றுகொண்டாடினள் ஆசனந்தன்னில்
இருக்கவைத்தாள் உள் உருக்கம்வைத்தாள்
நின்றுகண்டாடினள் நீடும் ஆனந்தக்கண்
ணீர் சொரிந்தாள் புகழ்ச்சீர் சொரிந்தாள் 133

எவரேனும் துணைக்கில்லாமல் இந்தப்
பாவியிருக்கும் இடப்தேடித்
தேவரீர் வந்துற்ற செய்தி அறிந்திட
ஆவலுற்றேன் என்றாள் அன்புடையாள் 134

ஆசனந்தன்னில், இருக்கின்ற மாதவர்
அன்புள்ள கௌரிதனைப் பார்த்துப்
போசனமின்றிப் பசித்துவந்தேன் இனிப்
பொன்மயிலே அன்னப்போட்டிடென்றார் 135

அன்பூட்டி அய்யர்க் கமுதூட்ட விளைந்
தக்ஷணம் ஓடிப்போய் ஆத்திரமாய்
வன்பூட்டில்க்கை வைத்த மாத்திரமே அது
வாய் விடக்கண்டனள் மங்கை நல்லாள் 136

அந்தப்படியே அடுக்களையுள்ப்புகுந்
தாசார மாகத்தரை மெழுகிக்
கந்த மலர்ச் செழுங்தோட்டத்தினுள்ச் சென்று
கறிக்குக் காய்கள் பறித்து வந்து 137

மற்றும் அவ்வீட்டில் இல்லாத எல்லாம் தெரு
வாசலில் விற்கையால் வாங்கிக் கொண்டு
சிற்றிடையாள் அவர் உண்பதெல்லாமும்
சிருஷ்டி செய்தாளோ எனச்சொலவே 138

விந்தை மிகுத்த நளபாகமாக
விரைவில்ச் சமைத்து வெளியில் வந்து
செந்தளிர்க்கையில்க் கமண்டலநீர் கொண்டு
தேமொழியாள் அந்தச்சாமிதனை 139

எழுந்து வந்தருள் செய்க என்றோதி
யிசைந்ததினால் அவர்தாள் விளக்கி
விழுந்தநீர் தலைமேல்த் தெளித்துக் கொண்டு
வீட்டுள் ஓர் ஆசன மீதிருத்தி 140

பூங்கமழல்மீதினில் ஓங்கும் அன்பால் நறும்
புஷ்பம், கொண்டர்ச் சித்துப்பூசித்தபின்
பாங்குடனே யிடஞ்செய்து திருத்தும்
பரிகலமிட்டுப் படைக்கலுற்றாள் 141

வெள்ளிமலை போலே அன்னம் இட்டாள் மலை
மீதுற்ற தங்கக் கொடுமுடி போல்
அள்ளிப் பருப்பையும், மேல்ப்படைத்தாள் அதில்
அருவியாம் என நெய் வார்த்தாள் 142

பக்கமாய் வெள்ளிமலையினைச் சூழ்ந்த
பலமலை போலப்பரி மளங்கள்
மிக்குற அன்னத்தைச் சூழ அறுசுவை
வர்க்க வகைக் கறிதான் படைத்தாள் 143

உண்ணருசிக்கும் எள்ளோதனமும்
புளியோதனமும் ததியோதனமும்
விண்ணமுதத்தை நேர் சர்க்கரைப்பொங்கலும்
மிகப்படைத்தனள் மெல்லிநல்லாள் 144

அப்பளம் பாயசம் முப்பழம் மோதகம்
அப்பம் வடைகள் எல்லாம்படைத்துப்
பற்பல வாகிய பானவர்க்கங்களும்
பதிவில் வைத்தனள் பைந்தொடியாள் 145

அங்கம் பழுத்த பழம் போல் உள்ளவர்
அன்னத்தினைத் தொடு முன்னடுங்கும்
தங்கையினால் பிசைந்தெடுத்துச் சாப்பிடத்
தத்துவம் இல்லாதவர் எனவே 146

அடுத்தடுத்தவள் வாய் உபசாரச் சொல்
அமுதை அப்பன் செவிக்கூட்ட
எடுத்தெடுத்தவள் செங்கை பரிகலத்
திட்ட அமுதினை வாய்க்கூட்ட 147

தளர்ந்த மேனி போயுற்றவர் விண்ணவர்
தங்கர் இன்னமுதுண்டார் போல்
வளர்ந்த மூப்பு தவிர்ந்து குமாரராய்
மன்மதன் வெட்கும் வடிவெடுத்தார் 148

பூசும் வெண்ணீறது வாசக் கலவையாய்ப்
பொங்கும் உருத்திராக் கங்கள் எல்லாம்
தேசுமிகுந்த பொற் பூண்களுமாய்க்குறுஞ்
சிரிப்புத் தோன்றிய சீருடனே 149

காத்திடு மூப்பினர் காளை உருக்கொளக்
கண்டு நடுங்கி யேகை நெரித்தாள்
வேர்த்துடல் கூசிவிளைந் தொதுங்கிக்கற்பு
மென் கொடி நின்றாள் அவ்வேளையிலே 150

ஊர் வழி போனவர் வந்துவிட்டார் இவள்
உள்ளத்தில் ஏதேனும் கள்ளம் உண்டோ
ஆர்வழிபட்டாலும் முற்றிலும் சோதிப்ப
தய்யன் திருவிளையாடல் அன்றோ 151

செவ்விய மாயனுக்கன்பர்கள் தாம் வந்து
சேருமுன் அங்குள்ள சின்னமெல்லாம்
எவ்வனமோடு, மறைத்தொரு பாலன்
எனத் திருக்கோலம் எடுக்கலுற்றார் 152

விழுமறைப் பொற்சிலம்பலம் பக்கால்ப்பெரு
விரல்ச்சுவைத்துக் கண்ணீர் துளும்ப
அழுதணையாடையின் மேல்க்கிடந்தார் உல
கனைத்தையும் படைத்தாளும் அப்பன் 153

தன்பதம் தன்முடி தேடினோர் தாம் அழத்
தாய்முலை நாடித்தவித்திடல் போல்
அன்பின் வலையினில்ச்சிக்கிக்கைகால் உதைந்
தழும் குழந்தையை மாமி கண்டாள் 154

பந்தம்போல்க் கண்கள் சிவந்துருளச் சீறிப்
பார்த்திந்தப் பாலன் ஏதிம் மணைக்குள்
வந்தவாறெவ்விதம் என்று கோபித்தந்த
மாமியாள் கேட்டாள் மருமகளை 155

சங்கரன் அன்புக்கவுரி அவ்வேளையில்ச்
சாற்றிடுவாள் தேவதத்தன் என்போன்
இங்குதன் காதலியாளொடுங் கூட வந்
திருந்தக் குழந்தையைப் போட்டுவிட்டு 156

கொஞ்ச நேரத்தினுக்கம்மா இந்தக்
குழந்தையை நீ பார்த்துக்கொள் எனவே
கெஞ்சிக்கெஞ்சிச் சொல்லிப போயினள் என்றிடக்
கேட்டதி கோபம் கிளப்பலுற்றாள் 157

பண்டரன் பாதத்தில் பூவென ஓர் கண்ணைப்
பறித்துச் சாத்து மெய்ப்பத்தனுமாய்க்
கொண்டிணி தேறும் இடபமும் ஆகிக்
குலாவும் தம் தெய்வக் குறிப்புணரார் 158

என்பையும் பூண்டிடு காட்டினில் ஆடிமா
டேறும் சிவனிடம் மாறாத
அன்புடையான் பிள்ளைக் கன்புடையாய் எங்கள்க்
காகாய் நீயும் என்றப்போதே 159

மகவைத்தூக்கிக்கொண்டோடென ஓட்டினள்
மானம் இரக்கம் மருவாமல்
இகலும் தீமையும் கொண்டந்த வீட்டில்
இருந்த பிறரும் இசைந்தாரே 160

கல்லும் உருக மரம் உருகஇதைக்
கண்டவர்நெஞ்சும் கரைந்துருக
மெல்லியல்கௌரியும் வாய்விட்டழக்கையில்
மேவும் குழந்தையும் வீறிட்டழ 161

உய்யும் நற்காலம் வந்தொத்திடலால் அவள்
உள்ளம்உருகி அப்பிள்ளையினைக்
கையினில் ஏந்தித்தலைச்சடை ஜென்மக்
கடல்க்கரையாக வெளிக்கடந்தாள் 162

செங்கையில் ஏந்திய தாயிலாப்பிள்ளை
திருமுகம் நோக்கித்தெருவில் நின்று
சங்கையில்லாமல் மனந்தளர்ந்தாள் சொக்கர்
தம் விளையாட்டைத்தான் உணர்ந்தாள் 163

சேல்விழி அம்பிகைமந்திரம் சிந்திக்கச்
செய்யகுழந்தை தன்னைவிட்டு
மால்விடைமீதினில் ஏறியேஅந்தர
வாசியாய் வந்ததுமாது கண்டாள் 164

மூப்பில்த் தளர்ந்து நல் எவ்வனமாய்ப் பின்பு
முந்து மழலைக்குழந்தையுமாய்
கூட்பிட்டழுது கிடந்திட்டசுந்தரர்
கோல மழவிடைமேல் எழுந்தே 165

தந்தைமொழிப்படி ஐந்து வயதினில்ச்
சங்கரிமந்த்ரம் தனைத்தெளிந்து
சிந்தனைசெய்து மகிழ்ந்த கௌரிதன்
சென்மம் ஈடேற்றும் செயல் நினைந்தார்

மதிக்கும் அந்தக் கவுரியைததம் இடம்
வாழுங்கவுரி வடிவாக்கித்
துதிக்குமால் விடைமீது வைத்தே அருள்ச்
சொக்கர் எழுந்தருளிப்போனார் 167

அந்தநல்வேளையில் இந்திரன் ஆரியர்
அந்தா துந்துமி தான்முழக்கிச்
சந்தமலர்மழை பெய்தார் கண்டதி
சயித்துப்போற்றினார் தாரணியோர் 168

பெண்ணாசி கௌரி கஷ்டங்கள் பட்டதாய்ப்
பேசுவார் காசினியிற் சிலரே
எண்ணிற்றுன்பம் அவளுக்குச் சற்றும்
இருந்ததே இல்லை இஃதுண்மையே 169

துன்பம் இவை என்றும் இன்பம் அவை என்றும்
தோற்றங்கள் கொண்டதைச் சொற்றிடுதல்
என் பயனாகிடுந் தன் மனப்பக்குவம்
எந்த நிலைமைக்குங் காரணமாம் 170

ஆதலின் மூன்றவஞ் செய்தவர்க்கே யன்றி
யாகாவந்த வருந்தவமே
மாதரசி செய்த மாதவப்பேற்றால்
மருவிய தப்பெருவாழ்வதுவே 171

மாமிமாமனர் செய்த கொடூரங்கள்
மண்ணிற் பெரிதாகத் தோற்றிடினும்
சாமிமேல் வைத்த மெய்பத்தி முதிர்ச்சி
தவத்தினுக் கேதுவாய்ச் சார்ந்ததுவே 172

எத்துன்பமெய்தினுஞ் சித்திரத்தாமரை
யேநிகராகுமிவள் முகமே
இத்தகைய சிவன் மூத்தர்கட் கானந்தம்
எங்கும் பொருந்திடுந் தோழியரே 173

தந்தை தனக்குபதேசித்த மந்திரந்
தக்கதன்றே யுணர்ந்துத்தமியாள்
சிந்தனை செய்ததாற் பெற்றதோர் பேற்றினை
செப்பிட நம்மால் முடிந்திடுமோ 174

எட்டிலடங்காது மூததோர் சொலின் பயன்
யேந்திழையீர் ஒரு ஞானியார் என்
வீட்டினில் வந்துபதேசங்கள் செய்ததை
மெய்ம்மையா எண்ணி நீர் கேட்டிடுவீர் 175

சுந்தரமான பெரியவர் என்னிடம்
சொன்ன சொல்லின்படி நாம் பயில்வோம்
எந்த விதத்திலும் இம்மை மறுமை
இரண்டிலும் பேரின்பமெய்துவமே 176

நல்லாருடனே நாம் சேர்ந்திடுவோம் என்றும்
நாதனடிகளைச் சார்ந்திடுவோம்
கல்லாரோடுற வாடாமற் கல்வி
கற்ற பெரியோரை நாடிடுவோம் 177

கோபமென்பது தீங்கை உண்டாக்கிடும்
குற்றங்களுக்குள் மிகப்பெரிதாம்
லோபங்குரோதம் முதலிய குற்றமும்
லோகத்திற் கட்டோடே விட்டிடுவோம் 178

தீங்கு செய்தோர் மீதும் சிந்தையில் சற்றேனும்
தீங்குசெயச்சிந்தைசெய்யாமற்
பாங்காய் அவர்கட்குநன்மைகள் செய்துமே
பழகிச்சந்தோஷமாய் வாழ்வோம் 179

நாடெங்கும் வாழ்வதேநாம்வாழ்வதேயென
நாளும்மனம்மகிழ்நாம்நினைப்போம்
கேடொன்றும்வாராமல் நாம் நடப்போமெனிற்
கிட்டிடும் பேரின்பந்தோழியரே 1

சத்தியமே நமக்குற்ற துணையென்று
சஞ்சலமில்லாமல்வாழ்ந்திடுவோம்
எத்தனைகஷ்டங்கள் வந்தாலும்பொய்
எள்ளளவுஞ்சொல்லல் ஆகாது 181

இந்நிலத்திற் றோன்றும் எந்தப்பொருள்களும்
எண்ணில்நிலையற்ற தாகையினால்
தன்னயப்பாராட்டு மூடவறிவைநாஞ்
சற்றேனுங்கைப்பற்றல்கூடாது 182

கருவியாகின்ற சாதனங்கள்தமைக்
காரியமென்னக்கருதாமல்
அருமையாகம்முயிர்த்துணையான
வய்யனடிதொழுதுய்ந்திடுவோம் 183

169 முதல் 183 முடிய மகா-ள-ள-ஸ்ரீ T. S. சுப்பிரமணியபிள்ளை அவர்களால் இயற்றப்பட்டன.